
பூர்வநாட்களை நினைக்கிறேன்



Song 7 பூர்வநாட்களை நினைக்கிறேன்

143 சங்கீதம்

Psalm 143 is a heartfelt prayer in deep distress. The psalmist remembers God’s past faithfulness, confesses his need, and asks God to teach him His will and revive him by His Spirit.

பூர்வ நாட்களை நினைக்கிறேன்
உமது செய்கைகளையெல்லாம் தியானிக்கிறேன்
உமது கரத்தின் கிரியைகளை யோசிக்கிறேன்
என் கைகளை உமக்கு நேராய் விரிக்கிறேன்

தாகமாய் இருக்கிறேன் ஆண்டவரே
தாகத்தைத் தீர்க்கவாரும் ஊற்றுத்தண்ணீரே

சத்துரு என் ஆத்துமாவைத் தொடர்கிறான்
என் பிராணனைத் தரையோடே நசுக்குகிறான்
வெகுகாலத்துக்கு முன்பு மரித்தவனைப் போல்
என்னை இருளில் இருக்கப் பண்ணுகிறான்

ஆபத்தில் இருக்கிறேன் ஆண்டவரே
அதிசயம் செய்திடும் அன்பு தெய்வமே

சீக்கிரமாய் எனக்குச் செவிசாய்த்துவிடும்
என் ஆவி என்னில் தொய்ந்து போகிறது
நான் குழியில் இறங்கும் மனுஷனுக்கு ஒப்பாகாதபடி
உமது முகத்தை எனக்கு மறையாதேயும்

கதறிக்கொண்டு இருக்கிறேன் ஆண்டவரே
அற்புதம் செய்திடும் ஆவியானவரே

அதிகாலையில் உமது கிருபையைக் கேட்கப்பண்ணிடும்
உம்மை நான் நம்பியிருக்கேன் வழியைக் காட்டிடும்
உம்மிடத்தில் என் ஆத்துமாவை உயர்த்துகிறேன்
நீரென் புகலிடம் என் சத்துருக்கென்னைத் தப்புவியும்

ஜெபித்துக்கொண்டு இருக்கிறேன் ஆண்டவரே
ஜெயத்தைக்கொடும் இயேசு கிறிஸ்துவே

உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்கு போதித்திடும்
செம்மையான வழியில் என்னை நடத்திடும்
உமது நாமத்தினிமித்தம் என்னை உயிர்ப்பியும்
உம்முடைய நீதியின்படி என் ஆத்துமாவை காத்திடும்

மன்றாடிக்கொண்டு இருக்கிறேன் ஆண்டவரே
மகிமையாய் கேட்டிடுவீர் இயேசுவே

உம்முடைய கிருபையின்படி என் சத்துருக்களை அழித்திடும்
என் ஆத்துமாவை ஒடுக்குவோனை சங்காரம் பண்ணும்
உமது அடியேனின் விண்ணப்பங்களுக்கு செவிசாய்த்திடும்
உம்முடைய உண்மையின்படி எனக்கு உத்தரவுகொடும்

மனங்கலங்கி கேட்கிறேன் ஆண்டவரே
மனமிரங்கி எழுந்தருளும் இரட்சகரே

AD 70-313

DOMITIANVS
DECIUS
DIOCLETIANVS

STEPHANVS PRIMVS MARTYR





POLYCARPVS & PERPETVA FELICITAS



